**கவனிக்க**.-*2022.03.25 ஆந் திகதிய 2273 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II, *பகுதி* III *மற்றும்* IV(*அ*) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2274 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01

*2274 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 584 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 245 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருவது என்னவெனில்,

மட்டக்களப்பு மத்திய நகரிலிருந்து புதிய கல்முனை வீதி ஊடாக கல்லடி பாலத்தின் அருகில் அதன் இருப்பக்கமும் சூழவுள்ள காணிகளுக்கு மற்றும் "டச்பார்" வீதியிலுள்ள கடையுடன் ஆட்டோ தரிப்பிடமும் சேர்ந்த காணிகளும் அத்துடன் அரச நில அளவையாளர் நிலஅளவைப்படம் இல. 5938 கொண்ட 1924 ஆம் ஆண்டு தொடக்கம் 47 ஆம் கண்டம் என அழைக்கப்பட்டு வந்த 06 ஏக்கர் 02 றூட் 12 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணிகள் முற்று முழுவதும் "நடராஜா ஞானச்சந்திரன்" ஆகிய எனக்கே சொந்தமும் ஆட்சியும் உரிமையும் உள்ள பூமிகளாகும்.

இக் காணிக்குள் அரச திணைக்கள உயர் அதிகாரிகளுக்கோ, அதன் ஊழியர்களுக்கோ மற்றும் மாநகர சபை முதல்வருக்கோ மாநகரசபை உறுப்பினர்களுக்கோ வேறு எந்த தனிப்பட்ட நபர்களுக்கோ ஆட்சி செய்யும் உரிமையும் சொந்தமும் கிடையாது என ஆணித்தரமாகவும் உறுதியாகவும் சொல்லிக் கொள்கின்றேன்.

ஆனால், இதற்கான ஆவணங்கள் எவரேனும் வைத்திருந்து சொந்தம் கொண்டிருந்தாலோ அல்லது ஏதாவது உடன்படிக்கையோ அல்லது வழக்கு சம்பந்தமான ஆவணங்களோ இருப்பின் (2022.03.09 ) ஆந் திகதியிலிருந்து 2022.03.20 ஆந் திகதிக்குள் எனக்கோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்துக்கோ அல்லது பொலிஸ் விசேட குற்றத் தடுப்பு பிரிவினருக்கோ ( காட்டுக்கந்தோர்) அறியத்தரவும்.

**முக்கிய குறிப்பு**

இக் காணிகள் சம்பந்தமான பொய்யான தகவல்களையோ மேலும் உண்மைக்கு புறம்பான போலியான ஆவணங்களை வைத்திருப்போரும் சட்டத்திற்கு புறம்பான வழங்கு தாக்கல் செய்த சகலருக்கும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பேன் என ஆணித்தரமாக கூறுகின்றேன்.

அத்துடன் இக் காணிகளைச் சேர்த்து 47 ஆம் கண்டம் என அழைக்கப்படும் காணிக்கு என்னால் போடப்பட்ட வழக்கு இல. காணி 6315/2016 ஆகும்.

நடராஜா ஞானச்சந்திரன்,
மட்டக்களப்பு,(510442865V).

04-28

## 2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

## நு- டெக் இன்டர்நெஷனல் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனி இலக்கம் & PV 5059

## அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

நு- டெக் இன்டர்நெஷனல் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனியானது அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு என்ற வகையில் இக் கம்பனியை கலைக்கவும் 3 ஆவது மாடி, இலக்கம் 09- 2/3, பள்ளி பாதை, கொழும்பு 03 என்ற முகவரியைச் சேர்ந்த பட்டய கணக்காளரான திரு. வி. ஏ. சானகா புஷ்பகுமார அவர்கள் இக் கம்பனியின் கலைப்பாளராக2022, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட மகாசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டு அன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 319(1) (b) ஆம் பிரிவின் பிரகாரம் உறுதிசெய்யப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

வி. ஏ. சானகா புஷ்பகுமார,
கலைப்பாளர்.

3 ஆவது மாடி,
இல. 09- 2/3,
பள்ளி பாதை,
கொழும்பு 03.

04-37/1

---

## 2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

## நு- டெக் இன்டர்நெஷனல் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனி இலக்கம் & PV 5059

## கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவித்தல்

2022, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக் கம்பனியின் விஷேட மகாசபைக் கூட்டத்தில் நு- டெக் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விஷேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் பட்டய கணக்காளராக திரு. வி. ஏ. சானகா புஷ்பகுமார ஆகிய நான் நியமிக்கப் பட்டுள்ளேன் என்பதை 3 ஆவது மாடி, இலக்கம் 09-2/3 பள்ளி பாதை, கொழும்பு 03 எனும் இடத்தைச் சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

வி. ஏ. சானகா புஷ்பகுமார,
கலைப்பாளர்.

3 ஆவது மாடி,
இல. 09- 2/3,
பள்ளி பாதை,
கொழும்பு 03.

04-37/2

## பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, மவுன்டெய்ன் ஹோக் எக்ஸ்பிரஸ்( பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை அட்வாண்டிஸ் எக்ஸ்பிரஸ் ( பீவீட) எல்டீடி என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கேற்ப இத்தால் அறிவிக்கின்றோம்.*

*கம்பனியின் முன்னைய பெயர்:* மவுன்டெய்ன் ஹோக் எக்ஸ்பிரஸ் ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனி இலக்கம்: பீவீ 454*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
*புதிய கம்பனியின் பெயர்:* அட்வாண்டிஸ் எக்ஸ்பிரஸ் (பீவீட) எல்டீடி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் ( பிறைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

இல.400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2022, மாச்சு 16.

4-45

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோட்டை, மாதிவெல, சுபத்ரா மாவத்தை, இல.22/8 எனும் இடத்தில் குடியிருக்கும் பத்மினி மல்லிகா லியனகே (தே.அ.அ.இல. 466532177V) ஆகிய நான், 2010, யூலை மாதம் முப்பதாம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு திரு. கீர்த்தி சிகேரா என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திர இல. 6324 என்ற அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் கோட்டை, மாதிவெல, சுபத்ரா மாவத்தை, இல.22/8 என்ற இடத்தில் குடியிருக்கும் டாக்டர் அனீஷ புத்திக மொல்லிகொட லியனகே ( தே.அ.அ.இல. 731970025V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பத்மினி மல்லிகா லியனகே.

04- 09

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, கொழும்பு 7, இல. 65C இல் அமைந்துள்ள சிட்டி பேங்க் இல் சிட்டி நாட்டு அதிகாரியாக ரவின் பஸ்நாயக்க ஆகிய நான், கொழும்பு 7 இல. 65C இல் வசிக்கும் ராஜவசம் வெள்ளால ஹெட்டிகே டுலிப் ஜனக விஜேதிலக்க என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ.எச். சுமதிபாலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 2012 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 16 ஆந் திதி என திகதியிடப்பட்டதுமான 344 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்துள்ளதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட ராஜவசம் வெள்ளால ஹெட்டிகே டுலிப் ஜனக விஜேதிலக்க என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக் காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

ரவின் பஸ்நாயக்க.

04- 17

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்லிந்தவத்த, ஆந்தாதொள வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் இலக்கம் 195536110020 என்ற தேசிய அடையாள அட்டையுடைய ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அஸிகா எஸ்.எஸ். ஹப்புஆரச்சி என்பவரினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய 2724 ஆம் இலக்கம் உடைய விஷேட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் கல்லிந்தவத்த, ஆந்தாதொள, வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் 558634529ஏ என்ற இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டையையுடைய பனியன்தூவகே வங்ஸா என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பின்னர் மேற்படி பனியன் தூவகே வங்ஸா என்பவர் என் சார்பில் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா.

04- 19

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்லிந்தவத்த, ஆந்தாதொள வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் இலக்கம் 195536110020 என்ற தேசிய அடையாள

அட்டையுடைய ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அஸிகா எஸ்.எஸ். ஹப்புஆரச்சி என்பவரினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய 2726 ஆம் இலக்கம் உடைய விஷேட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் கல்லிந்தவத்த, ஆந்தாதொள, வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் 5586334529V என்ற இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டையையுடைய பனியன்தூவகே வங்ஸா என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பின்னர் மேற்படி பனியன் தூவகே வங்ஸா என்பவர் என் சார்பில் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா.

04- 20

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்லிந்தவத்த, ஆந்தாதொள வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் இலக்கம் 195536110020 என்ற தேசிய அடையாள அட்டையுடைய ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அஸிகா எஸ்.எஸ். ஹப்புஆரச்சி என்பவரினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய 2727 ஆம் இலக்கம் உடைய விஷேட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் கல்லிந்தவத்த, ஆந்தாதொள, வத்துகெதர, சமகி மாவத்தையில் வசிக்கும் 558634529V என்ற இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டையையுடைய பனியன்தூவகே வங்ஸா என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பின்னர் மேற்படி பனியன்தூவகே வங்ஸா என்பவர் என் சார்பில் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஹக்கினி இந்ர அமரசிறி த சில்வா.

04- 21

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

அத்துருகிரிய, ஒறுவெல, மஹஜன மாவத்தை, இலக்கம் 6/S மற்றும் தற்பொழுது இத்தாலி நாட்டில் ரிமினி (47921), வியா இத்தாலியா , இலக்கம் 43 என்ற முகவரியில் வசிக்கின்ற ரம்புக்கனகே கோதமி சகீலா பரணமான்ன பெர்னாந்து (தே.அ.அ.இல. 878051637V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, கொழும்பிலுள்ள பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான ஏ.எச்.டீ.எம். தமயந்தி அவர்கள் எழுதி சான்றுப்படுத்திய 212 ஆம் இலக்க 2008.09.16 ஆந் திகதிய பொது அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் அற்றோணித்தத்துவம் பெறும் அற்றோணித்தத்துவகாரரான அத்துருகிரிய, ஒறுவெல, மஹஜன மாவத்தை, இலக்கம் 6/S என்றழைக்கப்படும் முகவரியில் வசிக்கும் தோன ஜராங்கனி வீரகோன் (தே.அ.அ.இல.527151836V) என்பவருக்கு இந்த நாட்டில் என்னை பிரதிநிதிப்படுத்த அதிகாரம் அளித்தேன் எனவும், இன்றிலிருந்து அந்த குறித்த அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். ஆகையால், 2022.03.15 ஆந் திகதி முதல் எனது சார்பாக குறித்த தோன ஜராங்கனி வீரகோன் என்பவர் 212 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் பேரில் செய்யும் எந்தவொரு கொடுக்கல்வாங்கல், செயல் அல்லது சாட்டும் எந்தவொரு சாட்டுதலும் சட்ட வலுவிழந்து காணப்படும் எனவும், அத்தகைய செயலுக்கு நான் பொறுப்பற்றவளாவேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரம்புக்கனகே கோதமி சகீலா பரணமான்ன
பெர்னாந்து.

04- 22

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கை, கொழும்பு 8 , பொரளை, கொட்டாரோட், இல. 153 இல் முன்பு வசித்த ஐ.அ.ஏ. சரிஆ அல்காஸிமியா, கிறிஸ்டல் பிளாஸா ஹோட்டலுக்கு அருகில், அல் புஸ்டன் டவர், 504 இல் தற்போது வசிக்கும் பெத்தேகமகே மஞ்சுள கிரிசாந்தி (தே.அ.அ.இல. 717661907V) ஆகிய நான், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு மன்டடிகே நொலிட் பிரீசன் பெர்னாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, ஏப்பிறல் 20 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித்தத்துவ இல. 7319 மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் தினப் புத்தகம் 4727 ஆம் அத்தியாயம் 06 இன் பக்கம் 245 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட , இலங்கை, கொழும்பு-09, பொரளை, கொட்டாவீதி, இல. 153 ஐச் சேர்ந்த மில்லவித்தான ஆரச்சிகே தொன் சந்திமா நளின் விக்ரமரத்ன (தே.அ.அ.இல. 742422720V) என்பவரை நியமித்திருந்த எனது உண்மையான சட்ட ரீதியான அற்றோணித் தத்துவத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

சொல்லப்பட்ட அற்றோணியின் கீழ் என் பெயரில் அல்லது என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த சட்டங்களும், உறுதிகளும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பிறகு நான் பொறுப்பாக மாட்டேன்.

பெத்தேகமகே மஞ்சுள கிரிசாந்தி .

04- 34

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

சிரில் மாவத்தை, மஹவஸ்கடுவ தற்பொழுது Via Marcantonio Ducco, 422123, Brescia Italy இல் வசிக்கும் சுவர்ணா ரேனுகா த சில்வா முனசிங்ஹ ஆகிய நான், களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி மாரி எஃப் ஃபொன்சேகா என்பவரின் 1473 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் இலக்கம் 105, சிரில் மாவத்தை, மஹவஸ்கடுவ, வஸ்கடுவயில் வசிக்கும் நிசான்த டீ சில்வா முனசிங்ஹ என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேற்படி பிரசான்த டீ சில்வா முனசிங்ஹ என்பவரினால் இதன் பின்னர் என் சார்பில் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

சுவர்ணா ரேணுகா த சில்வா
முனசிங்ஹ.

04- 32

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலக்கம் 142/ 1, உடுலகும்புர, தன்துரே, தபால் பத்கொட இல் வசிக்கும் வீரசேகர முதியன்சேலாகே துளசி குமாரி வீரசேகர அல்லது கன்னிப் பெயர் துளசி குமாரி ஜயசுந்தர (தே.அ.அ.இல. 866161623V மற்றும் P.P.no. 659358442) ஆகிய நான், கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி மீனு உபர்னா அமரதுங்க என்பவரினால் 2016, பெப்புருவரி 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 42 ஐ உடையதும் 2016.03.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதும், இலக்கம் 142/1, உடுலகும்புர, தன்துரே தபால் பத்கொட இலங்கையில் வசிக்கும், கியந்துவகே சுமித்ரா ( தே.அ.அ.இல. 528044409V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமான விஷேட அற்றோணித் தத்துவமானது உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

வீரசேகர முதியன்சேலாகே துளசி
குமாரி வீரசேகர

அல்லது (கன்னிப் பெயர்) துளசி குமாரி
ஜயசுந்தர.

04- 70

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

நிக்கவெரட்டிய தபால் பிரிவு, ஜயந்தி வித்தியாலய மாவத்தை, இலக்கம் 177/2 இல் வசிக்கும் ( தே.அ.அ.இல. 866791210V) என்ற முதுபோர தொட்டகே சுலானி வெனுரிகா ஜயவர்தன ஆகிய நான், இலங்கை அரசுக்கும் இலங்கை மக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது, குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணித் தத்துவப் புத்தகத்தின் 144 நிரலில் 12191 வராலாற்றுத் தாளில் 447 நாட்குறிப்பில் இலக்கத்தின் கீழ் 2020, பெப்புருவரி 07 ஆந் திகதி பதிவு செய்துள்ள குருநாகல் சட்டத்தரணி மற்றும் ரஞ்சித் குமாரசிறி அவர்களினால் எழுதப்பட்ட அவுஸ்திரேலியாவில் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரினால் அத்தாட்சிப்பத்தப்பட்ட அற்றோணித் தத்துவம் மூலம் எனது அற்றோணித்தத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்ட குருநாகல் தபால் பிரிவு மல்கடுவாவ, புலுககவத்த, மூன்றாவது குறுக்குத் தெருவில், இல.145/1 இல் வசிக்கும் ( தே.அ.அ.இல. 895610518V) என்ற யடன்வல விதான மலாகே திளினி மேரியன் யடன்வல என்பவரின் நியமனத்தை இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முதுபோருகொடகே சுலானி
வெனுரிகா ஜயவர்தன,

(தே.அ.அ.இல.866791210V).

2022, மாச்சு 09.

04- 71

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

கேகாலை, ஹெட்டிமுல்ல, டிகெல்ல, 209/ 2 ஆம் இலக்கத்திலுள்ள இஸ்கோல வத்தகெதர துஷாரி டில்ருக்ஷி ரத்நாயக்க (717611640V) என்ற தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) ஆகிய நான், வெளிநாட்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 705790760V) என்ற தேசிய அடையாள அட்டையைக் கொண்டவரும் இலங்கைக் குடியரசின் களனிய, வனவாசல, களனிதிஸ்ஸ மாவத்தை, 12/4 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் திருமணத்திற்கு முன்னர் பெர்ணான்டோ என அழைக்கப்பட்ட மற்றும் என்னால் வழங்கப்பட்டதுமான வர்ணகுலசூரிய சமாரி ஜெசிக்கா இஹலகெதர என்பவருக்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2020.08.18 ஆந் திகதியிடப்பட்டதும் 312 ஆம் பாகத்தில் 26 ஆம் பக்கத்தில் 8339 ஆம் இலக்க நாட்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு எழுத்துமூலமான அதிகாரம் கொண்டவர்கள் மற்றும் விஷேட அற்றோணித்தத்துவத்தைக் கொண்டவர்களாலும் பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து மேற்கூறப்பட்ட வர்ணகுலசூரிய சமாரி ஜெசிக்கா இஹலகெதர என்பவரினால் திருமணத்திற்கு முன்னர் பெர்ணான்டோ என அழைக்கப்பட்டவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இஸ்கோல வத்த கெதர
துஷாரி டில்ருக்ஷி ரத்நாயக்க.

2022.01.25.

04-90

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

கந்தான, நாகொட, நிவ் ரோயல் கார்டன், இல. 35/2 எனும் முகவரியில் வசிக்கும் பஸ்தியனகோராலலாகே கமல் சுதந்த ருத்திரிகு ஆகிய நான், (தே.அ.அ.இல. 671020154V) பமுனுகம, புல்லுஹேன, இல. 448 எனும் முகவரியில் வசிக்கும் கட்டுகம் பதிரனகே ரனில் தரங்க (தே.அ.அ.இல.8103413787V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு பி. ஏ.இந்துனில் ருத்திரிகு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இல. 448 மற்றும் 2019.05.19 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக் கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப் பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பஸ்தியனகோராலலாகே கமல்
சுதந்த ருத்திரிகு.

2022, மாச்சு 27.

04- 97

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

எம்பிலிப்பிட்டிய, மொரகெட்டிய, இல. 3012 இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 198105901005) ஹெட்டி ஆரச்சிகே சம்பத் சுரங்க ஆகிய நான், 2019.04.01 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு பிரக்ஞா லியனகே என்பவரால் துங்கமவில் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 1833 கொண்ட அற்றோணிப் பத்திரத்தின் மூலம் எம்பிலிப்பிட்டி, மொரக்கெட்டிய, இல. 3012 இல் வசிக்கும் (தே.அ.அ.இல.828023578V) குடா விதானகே தரங்கா சங்கல்பனீ திலகரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கை வாழ் மக்களுக்கு இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஹெட்டி ஆரச்சிகே சம்பத் சுரங்க.

04- 18

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஓ. சீ. பதுகே
கணக்கு இலக்கம் : 0212 5000 0100

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.08.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.10.12ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2018.10.01ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து முந்நூற்று எழுபத்தி ஒன்பது ரூபா அறுபத்தி ஐந்து சதம் (ரூபா 1,64,96,379.65) 2018, யூலை 25 ஆந் திகதி அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து ரூபா எழுபத்தி ஒன்பது சதம் (ரூபா 1,58,49,325.79) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.04.28 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே தாசியே பத்து மினுவங்கொடை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் எல்லைகளுக்குள் வத்துமுள்ள இல. 133 கிராம அலுவலர் பிரிவின் வத்துமுள்ளையில் அமைந்த தொரனகொட வீதி, வரிமதிப்பீட்டு இல. 295, ஐ ஏற்ற "எம்பரெல்லாகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. எஸ். பத்மினி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஏப்பிறல் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 10260 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வத்துமுள்ள பன்சலை காணி மற்றும் பெர்னாண்டோ என்பவரின் காணி ; கிழக்கு : மில்ட்டன் பெரேரா என்பவரின் காணி; தெற்கு : மில்ட்டன் பெரேரா என்பவரின் காணி மற்றும் அஸ்கிரிய முதல் தொரணகொட வரையான பிரதான

வீதி ; மற்றும் மேற்கு : வத்துமுள்ள பன்சலை காணி மற்றும் பெர்ணான்டோ என்பவரின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 10260 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட "எம்பரெல்லாகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 61/89 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : முன்னர் கரனோலிஸ் சில்வா தற்போது எம். ஏ. ஜயசிங்ஹவின் யக்கார வத்தை; கிழக்கு : லொட் B; தெற்கு : தொரனகொடவிற்கான வீதி மற்றும்; மேற்கு : முன்னர் இஸான் அப்புவினது தற்போது வத்துமுள்ள பன்சலை காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.1றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 61/89 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 190/60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 01

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பீ. டபிள்யூ. பீ.பீ. விக்ரமநாயக்க
கணக்கு இலக்கம் : 1181 5386 5054

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.02.11ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2022.02.01ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஏழு கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்றி பத்தொன்பது ரூபா ஒரு சதம் (ரூபா 7,77,90,419.01) 2020, நவெம்பர் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஆறு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 6,50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3486, 3783 மற்றும் 5476 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.04.29 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிரவேட் பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் காலி மாநகர சபை எல்லைகளுக்குள் கந்தெவத்த இல. 96F கிராம அலுவலர் பிரிவின் கந்தெவத்த கும்பல்வெல்ல இல் அமைந்த "தோம்ஸ்கெவத்த ஓவிட்ட மற்றும் தோம்ஸ்கெவத்த ஓவிட்ட இன் மூன்றில் ஒரு பங்கின் வடக்கு பகுதி (இல. 693 ஐ ஏற்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஏ. சந்ரபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016.11.26 ஆந் திகதியிடப்பட்ட இல. 1648 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: முஹந்திரம் டீ. ஜே. அரம்பவெல மாவத்தை; கிழக்கு: எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட கிழக்கு பகுதி (இல. 67ஐ ஏற்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A); தெற்கு: வெல்லமடமெ ஓவிட்ட மற்றும் மேற்கு: இதே காணியின் லொட் 5 மற்றும் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினான்கு தசம் ஆறு பேர்ச் (00ஏ. 00றூ. 14.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1648 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட கும்பல்வெல்ல இல் அமைந்த "தோம்ஸ்கெவத்த ஓவிட்ட மற்றும் தோம்ஸ்கெவத்த ஓவிட்ட இன் மூன்றில் ஒரு பங்கின் வடக்கு பகுதி (இல. 693 ஐ ஏற்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A)" என்றழைக்கப்படும் காணிக்கு (காலி

மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல. 37889 இல் குறிப்பிடப்பட்ட) உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. விரசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973.08.13 ஆந் திகதியிடப்பட்ட இல. 621 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: முன்னர் ஹியுமஸ் வீதி மற்றும் தற்போது முஹந்திரம் டீ. ஜே. அரம்பவெல மாவத்தை; கிழக்கு: எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட கிழக்கு பகுதி (இல. 67 ஐ ஏற்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A); தெற்கு: வெல்லமடமெ ஓவிட்ட மற்றும் மேற்கு: இதே காணியின் லொட் 2 மற்றும் 5, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 15பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 193/139 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்

04-02

---

**மக்கள் வங்கி - (கூட்டிணைந்த வங்கிப் பிரிவு )**
**பெறுமதிமிக்க சொத்து**
**பகிரங்க ஏல விற்பனை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான விற்பனை*

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை, தொட்ட முனே, அளுத்கம பெத்தயில், பேருவளை பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், கிராம அலுவலர் பிரிவு இல. 760 மொறகல்ல இல் அமைந்துள்ள , களுவாமோதர, கலவிலயில் அமைந்துள்ள "கலவில்வத்த" என அழைக்கப்படும் , அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் என். குலரத்ன அவர்களால் 2008, நவெம்பர் 03 ஆந் திகதி வரையப்பட்ட 2587C ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "D" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் :2ஏ.1றூ. 28.50பே. அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக. களுத்துறைக் காணிப்பதிவகத்தில் D/ 130/125 என்ற இலக்கத்தின் கீழ் (2587C என்ற வரைபடம்) பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2022ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19ஆந் திகதி செவ்வாய்க் கிழமை மக்கள் வங்கி களுத்துறைக் கிளையின் கேட்போர் கூடத்தில் மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப் புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

வரையறுக்கப்பட்ட டபிள்யு.எம். மென்டிஸ் அன்ட் கம்பனியினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சொத்து.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- தயவு செய்து 2021, பெப்புருவரி 12ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021, பெப்புருவரி 05 ஆந் திகதிய "டெயிலி நியுஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணிக்குச் சென்றடைவதற்கான வழி**.- அளுத்கம நகரத்தி லிருந்து காலி வீதி வழியாக சுமார் 100 மீற்றர் வரை செல்லும் போது இல. 50, காலி வீதி, மொறகொல்ல என்ற முகவரியைக் கொண்ட சொத்து பாதையின் இடது பக்கமாக அமைந்துள்ளது. காணியின் துண்டு D இதில் முன்புறமாகக் காணப்படுகின்றது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10 % (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500.00;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றி தழுக்கான நொத்தாரிஸ் கட்டணம் .

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிரதான முகாமையாளர், அறவீடுகள் மக்கள் வங்கி தலைமைஅலுவலகம், 10 ஆவது மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு -02 என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 011- 2481443/ 011- 2481546.

காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற்குறித்த முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல
விற்பனையாளர்,
130 வருட கால மகோன்னத
சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி, கண்டி,
தொலைபேசி : 081-2227593, 2671468.
பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையத்தளம்: www.sandslanka.com

4- 10

---

**கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்**

பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

க்லெட்வின் அந்தோனி டென்சில் லூட்வைக் என்பவர் "கடப்பாடுடையவராகவும்/ ஈடுவைத்தவராகவும்" மற்றும் இனேஷா கௌமுடி லூட்விக் கடப்பாடுடையவராகவும் PB4847 என்ற பதிவு இலக்கத்தைத் தாங்கிய கார்கில்ஸ் வங்கி லிமிட்டட் சார்பாக பிரசித்த நொத்தாரிசு ஏ.சி. நத்ஸாவினால் 2018.08.06 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 433, 435 மற்றும் 438 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது பெறப்பட்ட கடன் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால்,

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் இடத்திலேயே கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்டினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கோவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் அமையவே நடாத்தப்படும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளேவின், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை - கல்கிஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் கலுபோவிலவில் அமைந்துள்ள சேர்ச் வீதி 15 (பகுதி)வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹவத்த என்றும் எரகடே வத்த என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்கவினால் வரையப்பட்ட 2005, யூலை 27 ஆந் திகதிய 3495/9000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் Y என்ற காணி மற்றும் மற்றும் கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம். இருபத்துநான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (0ஏ.0றூ.24.7.பே.) விஸ்தீரணமானது.இது தெல்கந்த காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் F 227/89 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோரளேவின், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை - கல்கிஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் கலுபோவிலவில் அமைந்துள்ள சேர்ச் வீதி15 (பகுதி) வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹவத்த என்றும் எரகடே வத்த என்றும் தற்போது சனிசைட் என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். சி.பீ. ராஜபக்ஷவினால் வரையப்பட்ட 2005, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட 1030ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள உடனானதும் மேலானதுமான பாதையை உபயோகிக்கும் உரிமையுடன் கூடிய லொட் ஆ4 (6 மீற்றர் அகலமான பாதைக்கான ஒதுக்கீடு ) என்ற காணித்துண்டு பன்னிரெண்டு தசம் ஒன்பது இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.12.92பே.) விஸ்தீரணமானதும் இது தெல்கந்த காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் M 2460/257 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோரளேயில், பள்ளே பற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி 537A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள மீகஹாவத்த என்றும் எரகடேவத்த என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ராஜேந்திரனால் வரையப்பட்ட 1965, ஒற்றோபர் 22ஆந் திகதியிடப்பட்ட 3134ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 4 என்ற காணி ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.9பே.) விஸ்தீரணமானது அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3134 மற்றும் இலக்கம் M 2802/177 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**: கொழும்பு நகரத்திலிருந்து கொழும்பு- ஹொரண வீதியினூடாக கொஹுவலைக்குச் சென்று இடதுக்குத் திரும்பி எஸ். டீ. எஸ். ஜயசிங்க ஒழுங்கை (முன்னர் சர்ச் வீதி) 200 மீற்றர் அளவு தூரம் சென்று இடதுபக்கம் திரும்பியவுடனேயே வரும் சேஜிஸ் கெம்பஸ் வீதி இக் குறிப்பிட்ட காணிக்குச் செல்லும். இக்குறிப்பிடப்பட்ட காணியானது எஸ். டீ.எஸ். ஜயசிங்க ஒழுங்கையிலிருந்து வலது

பக்கத்தால் சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ளது. அத்தோடு, ஹைலெவல் வீதியினால் நுகேகொடை சந்தியை அடைந்து அங்கிருந்து வலது பக்கத்துக்குத் திரும்பி எஸ். டீ. எஸ். ஜயசிங்க ஒழுங்கைக்குச் சென்று அதிலிருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் இக் குறிப்பிட்ட காணி தென்படும். இவ்வாறும் இக் காணியை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2019.10.11 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும், 2019.10.11 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5% ; கொள்வனவு விலையின் (இரண்டரை வீதம்) 2 1/2 % இதற்கு மேலாக ஏற்புடைத்தான வரிகள் ;
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

